Sulekha express




# FAQ on Short Stories

சிறுகதை பற்றி என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

Presents Sujatha Rangarajan's eBook

**Published by** *Sujatha Rangarajan*

**Copyright © 2003** *Sujatha Rangarajan All Rights Reserved*

**Distributed by** Sulekha Epress

**Sulekha, Sulekha.com, Epress, Sulekha Epress, Epress logo and Sulekha logo are trademarks of Smart Information Worldwide Inc.**

NOTICE: This eBook is licensed to the original purchaser only. Duplication or distribution to any person via email, floppy disk, network, print out, or any other means is a violation of International copyright law and subjects the violator to severe fines and/or imprisonment. This book cannot be legally lent or given to others without the written permission of Sulekha.

CONTACT US: Sulekha, 4926 Spicewood Springs Road, Suite 101
Austin, TX 78759, USA

Sulekha, 96 Dr Radhakrishnan Salai, 2nd Floor
Chennai, 600 004, India

epress@sulekha.net



# சுஜாதாவின் முன்னுரை

இந்தக் கதைகள் பெரும்பாலும் இனணய்த்தில் லேசில் கிடைக்காதவை. விகடன் பக்கத்திலும், தேசிகன் பக்கத்திலும் என் கதை கட்டுனரகள் பல உள்ளன. இவைகள் அந்தப் பக்கங்களில் கிடைக்காது தனிப்பட்டு எழுதிய உதிரிக் கதைகள். தீபாவளி மலருக்கோ அல்லது சிறப்பிதழ்களுக்கோ அளித்தவை. இவைகளை சுலேகா அன்பர்களுக்கு பிரத்தியேகமாக அளிப்பதில எனக்கு மகிழ்ச்சி.

இவைகளில் 'திமலா' மட்டும் அம்பலத்திலேயே வெளியாகியுள்ளது. சைன்ஸ் ஃபிக்ஷன் கதைகளில் எனக்குப் பிடித்த ஒன்று என்பதனால் இதை போனசாக கொடுத்துள்ளேன். 'அமுதாவும் அவனும்' மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தின் ஒரு காட்சிக்காக எழுதபட்ட சிறுகதை. இது படத்தில் எப்படி காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அந்தப் படத்தைப் பார்த்த வாசகர்கள் நினைவு கொள்ளலாம். அல்லது விசிடி / டிவிடியில் பார்க்கலாம்.

சிறுகதை பற்றி என்னை அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளையும் இங்கு மறுபிரகடனம் செய்திருக்கிறேன். 'சுலேகா' மூலம் நல்ல எழுத்னத ஆதரிக்க இயலும் என்று நம்புகிறேன். முடிந்தால் தேர்ந்தெடுத்து உங்கள் சந்தேகங்களை தீர்த்துவைக்க ஒரு கேள்விபதில் பகுதியை துவக்க எண்ணியுள்ளோம். ஏறத்தாழ 200 சிறுகதையும் ஐம்பது நாவல்களும் பத்துப்பதினைந்து திரைக்கதைகளும் நாடகங்களைளும் ஊடகங்களில் எழுதியவன் என்கிற தகுதியில் என்னால் இயன்ற வரை நல்ல எழுத்துக்கு உதவுகிறேன்.

# சிறுகதை பற்றி என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

1 சிறுகதை என்பது என்ன? அதை எழுத எதாவது விதி இருக்கிறதா?

எனக்குத் தெரிந்த வரை ஒரே ஒரு விதிதான் அதற்கு.சிறிதாக உரைநடையில் விவரிக்கப் பட்டகதை.A short fictional narrative in prose.வேறு எந்த வரையறைக்குள்ளும் நவீன சிறுகதை அடங்காது.

2 இதில் நல்ல சிறுகதை என்பது?

நல்ல சிறுகதை என்பது சிறிதாக சிறப்பாக உரைநடையில் விவரிக்கப் பட்ட கதை.

3 'சிறப்பாக' என்கிற வார்த்தை அவசியமா?

அப்படித்தான நான் நினைக்கிறேன். கதை சிறப்பாக இல்லையென்றால் அதை மறப்பார்கள். ஒரு கதை ஜீவித்திருக்க அது சிறப்பாக சொல்லப் பட்டிருக்க வேண்டும்.

3 சிறுகதையின் அளவு என்ன ? வார்தைகளின் எண்ணிக்கையை வைத்து கணக்கிடுவார்களா?

சுமார் ஆயிரத்திலிருந்து பத்தாயிரம் வார்த்கைளுக்குள் சொல்லப் படவேண்டும் என்று குத்து மதிப்பாக சொல்லலாம்.

4 இந்த அளவு வரையறை எதற்கு?

இதை ஒரு வழிகாட்டியாகத்தான் சொல்லவேண்டும நு‘று பக்கங்கள் இருந்தால் அதை எனக்கு சிறுகதை என்று ஒப்புக்கொள்ள தயக்கமாக இருக்கிறது. அதே போல் ஒருபக்கத்தில் இருந்தால் அது கதையல்ல. கதைச்சுருக்கம..நான்கு வரிகளுக்குக் கீழ் என்றால் கவிதையாகச் சொலலிவிடலாம்.

5 அளவு வரையறை தேவைதானா?

தேவையில்லை என்று நவீன விமர்சகர்கள் சொல்கிறார்கள். உதாரணமாக ஜாய்ஸின் ' யுலிஸ்ஸிஸ்'ஸை (768 பக்கங்கள்!)ஒரு சிறுகதை என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். புதிதாக எழுதுபவர்கள் இந்த அளவு வரையறையைக் கடைப் பிடிப்பது நல்லது

6 சிறுகதைக்கு கதை தேவையா?

நல்ல கேள்வி.கதை தேவையா என்பதையும் இப்போது சந்தேகிக்கிறார்கள். ஆர்வெல்லின் 'A Hanging' என்னும் கட்டுரையை சிறுகதையாக பார்க்கிறவர்களும் உண்டு

7 சிறுகதை எதைப பற்றி இருக்கலாம்?

யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் இருக்கலாம்.

8 காலம்?

நுற்றாண்டு காலததையோ சில நிமிஷங்களையோ சொல்லலாம்.

9 கதை மாந்தர்கள்?

கருப்போ சிவப்போ, ஏழையோ பணக்காரனோ, வயசானவர்களோ இளைஞர்களோ, வியாதியஸ்தத்ரகளோ தர்ம கர்த்தாக்களோ, நாய் வளர்பபவர்களோ பாய் முடைபவர்களோ, விஞ்ஞானிகளோ வேதாந்திகளோ, மீசைக்காரர்களோ ஆசைக்கு அலைபவர்களோ, மீன்பிடிப்பவர்களோ,பஸ்பிடிப்பவர்களோ, சினிமா பார்ப்பவர்களோ இனிமா கொடுப்பவர்களோ, எந்த கதா பாத்திரமும் அதற்குத் தடையில்லை!

மனிதர்களே இல்லாமல கூடக் கதை சொல்லலாம். அப்படி ஒரு விஞ்ஞானக் கதை இருக்கிறது.

8 கதையை எப்படிச் சொல்லவேண்டும்?

கண்ணீர் வர சொல்லலாம். சிரிக்கச் சிரிக்க சொல்லலாம். கோபம் வர, ஆர்வம் வர,  வெறுப்புவர, படிப்பவருக்கு ஒன்பதில் ஏதேனும் ஒரு உணரச்சியைத் தந்தால்  போதும்.

9 இவ்வளவு விஸதாரமாக அறுதியிட்டபபடும் சிறுகதைகளில் பொது அம்சம் என்று எதுவும் இருக்காதே?

இருக்கிறது. ஒரே ஒரு பொது அம்சம்தான் எனக்குத் தெரிநதது. படித்த இரண்டு நிமிஷத்தில்  மறந்து போய் விட்டால் அது சிறுகதையல்ல. பஸ் டிக்கெட். ஒருவாரம் கழித்தோ, ஒரு வருஷம் கழித்தோ ஞாபகம் இருந்து அதை மற்றவரிடம் மாற்றியோ மாறறாமலோ சொல்ல வைப்பது நல்ல கதைகளில் உள்ள பொதுவான அம்சம்.

10 எப்படிச் சொல்கிறீர்கள்?

அனுபவத்தில்தான் .நான் 1979ல் எழுதிய சிறுகதைகளை இப்போது யாராவது நினைவு வைத்துக்கொண்டு சொல்லும்போது எனக்கு வேறு எந்த சான்றிதழும் தேவையில்லை

11 எனவே?

நல்ல சிறுகதைகள் காலத்தையும  அன்றாட அவசரத்தையும் கடக்கின்றன.

12 இது பேருக்குப் பேர் வேறுபடும் அல்லவா?

நிச்சயம். எனக்கு நல்ல  கதை உங்களுக்கு நல்ல கதையாக இருக்கவேண்டும என்று கட்டாயமில்லை. ஒரு கதை உங்களை எந்த விதத்திலும் பாதித்திருந்தால்  ஒரு மாதம் அல்லது ஒரு வருஷம் விட்டுக்கூட அதை உங்களால் திருப்பிச் சொல்ல முடியும்.

13 அப்படியென்றால் நல்ல ஞாபகம் உள்ளவர்கள் நல்ல ரசிகர்கள் என்பீர்களா?

இது ஞாபகப் ப்ரச்னை அல்ல. கதையின் பெயர்கள் இடம் பொருள் ஏற்பாடெல்லாம் ஞாபகம் இருக்க வேண்டியதில்லை. ஆனால் கதையின் அடிநாதம் அதில் பாதிதத ஒரு கருத்தோ வரியோ நிச்சசயம் நினைவிருக்கும்

14 அப்படி நினைவு இல்லையென்றால் ?

அப்படி இல்லையென்றால் அந்தக் கதை உங்களைப் பொறுத்த வரை தோல்விதான்.

15 இதை வாசகருககும் எழுத்தாளருக்கும உள்ள ஏற்பாடு என்று சொல்லலாமா?

ஒரு நட்பு என்று சொல்லலாம். ஒரு வாசகர் தனக்குப் பிடித்தமான எழுத்தாளரை ஒரு நண்பரைப்போல் தேர்ந்தெடுக்கிறார். காரணம். அவர் எழுதுவது இவருக்குப் புரிகிறது.

கதையின் ஏதோ ஒரு பகுதியை வாசகரால் தன் மனத்தில் மீணடும வாழ முடிகிறது. அந்த எழுத்தாளர் அந்த வாசகரின் வாழ்வின் குறையை ஏதோ ஒரு விதத்தில் நிரப்புகிறார்.

16 அதற்கு கதை புரியவேண்டும் அல்லவா ?

ஆம். கதை வாசகருக்கு புரியவேண்டியது மிக முக்கியமாக கருதுபவன் நான்.

17 சிலர் புரியாமலேயே கதை எழுதுகிறார்களே ?

அவர்களை பசித்த புலி தின்னட்டும்.